



# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ்




ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


மதுரை பதிப்பு *மணி 55 * ஓசை 170 உள்ளூர் - 19.06.2026 வெள்ளி விலை ரூ.4/- பக்கங்கள்-4 Website : http://maduraimaninews.com

Madurai Edition *Vol 55 * Issue 170 வெளியூர் - 20.06.2026 சனி Price Rs. 4/- Pages -4 Email: maduraimaninews@gmail.com


**தொட்டதெல்லாம் துலங்க, தடைகள் உடைய இதை செய்யுங்க..!** | **தேர்வே இல்லாமல் ரிசர்வ் வங்கியில் வேலை!!** | **ஓய்வூதிய திட்டம் வரை 30% இடைக்கால நிவாரணம்!** | **ஐ.பி.எல். 2027-ல் அதிரடி மாற்றம்.. பிசிசிஐ மெகா பிளான்!**

## நாடு திரும்பினார் பிரதமர் மோடி!



புதுடெல்லி, ஜூன். 19–

பிரான்ஸ் மற்றும் ஸ்லோவாக்கியா ஆகிய இரு நாடுகளுக்கான தனது பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் நரேந்திர மோடி வியாழக்கிழமை டெல்லி திரும்பினார்.

இந்தப் பயணத்தின்போது அவர் ஜி 7 உச்சிமாநாட்டில் பங்கேற்றதுடன், பல்வேறு உலகத் தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளையும் நடத்தினார்.

“பிரான்ஸ் உடனான இந்த பயணம், செயல்பாடுகள் மற்றும் முடிவுகள் அடிப்படையில் மிகவும் விரிவானதாக அமைந்தது. ‘பாரத் இன்னோவேட்ஸ்’ நிகழ்ச்சி நடைபெற்ற ‘நீஸ்’ நகரில் இப்பயணம் தொடங்கியது; அதைத் தொடர்ந்து ஜி–7 மாநாட்டிற்காக ‘எவியன்’ நகருக்கும், பின்னர் பாரிஸுக்கும் சென்றேன்.

பாரிஸில் ‘விவாடெக் 2026’ நிகழ்வு மற்றும் ஒரு பெரிய சமூகக் கூட்டத்தில் உரையாற்றியதுடன், பல்வேறு நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகளையும் சந்தித்தேன்,” என்று மோடி தனது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டார்.

“எனது நண்பரான அதிபர் மேக்ரான், பிரான்ஸ் அரசு மற்றும் அந்நாட்டு மக்கள் காட்டிய அன்பான வரவேற்பிற்கு நான் குறிப்பாக நன்றியுள்ளவனாக இருக்கிறேன். வரும் காலங்களில் இந்தியா – பிரான்ஸ் இடையிலான நட்பு இன்னும் வலுவடையும்,” என்றும் அவர் மேலும் கூறினார்.

முன்னதாக, வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்களிடையே உரையாற்றிய மோடி, இந்தியா உலகிற்கு ஒரு “நம்பகமான கூட்டாளியாக” உருவெடுத்து வருவதாகக் கூறினார்.

## ஐகோர்ட்டுகளின் தலைமை நீதிபதி பதவியை அலங்கரிக்கும் 4 பெண்கள்!



புதுடெல்லி, ஜூன். 19–

இந்தியாவில் உள்ள ஐகோர்ட்டுகளில் 4 பெண் நீதிபதிகள், ஒரே நேரத்தில் தலைமை நீதிபதி பதவியை அலங்கரித்து வருகின்றனர். இந்திய நீதித்துறை வரலாற்றில் இது புதிய சாதனையாக பார்க்கப்படுகிறது.

இந்தியாவில் உள்ள ஐகோர்ட்டுகளில் மொத்தம் 781 பேர் நீதிபதிகளாக பணியாற்றி வருகின்றனர். இவர்களில் 116 பேர் பெண் நீதிபதிகள் ஆவர். இது, ஐகோர்ட்டு நீதிபதிகளின் மொத்த எண்ணிக்கையில் சுமார் 14.85 சதவீதமாகும். மொத்தம் 116 பெண் நீதிபதிகள் ஐகோர்ட்டு நீதிபதிகளாக இருந்து வரும் அதே வேளையில் நீதித்துறை வரலாற்றில் முதன்முறையாக பீகார் (பாட்னா), குஜராத், மேகாலயா மற்றும் ஆந்திர மாநில ஐகோர்ட்டுகளில் 4 பெண் நீதிபதிகள் தற்போது தலைமை நீதிபதிகளாக பணியாற்றி வருகின்றனர். இது நீதித்துறை வரலாற்றில் ஒரு முக்கிய சாதனையாக பார்க்கப்படுகிறது.

சிக்கிம் ஐகோர்ட்டு நீதிபதியாக இருந்து வந்த மீனாட்சி மதன்ராய். கடந்த 5–ந்தேதி பாட்னா ஐகோர்ட்டின் தலைமை நீதிபதியாக பதவியேற்றதை தொடர்ந்து இந்த சாதனை எட்டப்பட்டுள்ளது. இதன்மூலம் நாடு முழுவதும் உள்ள 4 ஐகோர்ட்டுகளுக்கு ஒரே நேரத்தில் பெண் தலைமை நீதிபதிகள் தலைமை தாங்கும் சூழல் உருவாகி இருக்கிறது. பாட்னா ஐகோர்ட்டு தலைமை நீதிபதி மீனாட்சி மதன்ராயுடன், குஜராத் ஐகோர்ட்டின் தலைமை நீதிபதியாக சுனிதா அகர்வாலும், மேகாலயா ஐகோர்ட்டின் தலைமை நீதிபதியாக ரேவதி மொஹிதே தேரேவும் மற்றும் ஆந்திரபிரதேச ஐகோர்ட்டின் தலைமை நீதிபதியாக லிசா கில்லும் தற்போது தலைமை நீதிபதிகளாக இருந்து வருகின்றனர். குஜராத் ஐகோர்ட்டில் இருந்து பதவி உயர்வு பெற்ற நீதிபதி சுனிதா அகர்வால், அங்கேயே தலைமை நீதிபதியாக 2023–ம் ஆண்டு ஜூலை 23 முதல் பணியாற்றி வருகிறார். மும்பை ஐகோர்ட்டின் நீதிபதியாக இருந்த ரேவதி மோஹிதே தேரே. கடந்த ஜனவரி 10–ந்தேதி அன்று மேகாலயா ஐகோர்ட்டின் தலைமை நீதிபதியாக பொறுப்பேற்றார். பஞ்சாப் மற்றும் அரியானா ஐகோர்ட்டில் இருந்து பதவி உயர்வு பெற்ற நீதிபதி லிசா கில், கடந்த ஏப்ரல் 25–ந்தேதி அன்று ஆந்திரபிரதேச ஐகோர்ட்டின் தலைமை நீதிபதியாக பதவியேற்றார்.

இந்தியாவில் ஒரே நேரத்தில் 4 பெண்கள் ஐகோர்ட்டின் தலைமை பொறுப்பில் இருந்த நிகழ்வு இதற்கு முன்பு 2018–ம் ஆண்டு இருந்த போதிலும் ஒரே நேரத்தில் 4 பெண் நீதிபதிகள் முழுநேர தலைமை நீதிபதிகளாக பணியில் இருப்பது இதுவே முதல் முறையாகும். அதாவது, 2018–ம் ஆண்டு சென்னை ஐகோர்ட்டில் நீதிபதி இந்திரா பானர்ஜியும், மும்பை ஐகோர்ட்டில் நீதிபதி மஞ்சுளா செல்லூரும், டெல்லி ஐகோர்ட்டில் நீதிபதி ரோகிணியும் தலைமை நீதிபதிகளாக பணியாற்றி வந்த நிலையில் பெண் நீதிபதியான நிஷிதா நிர்மல் மத்ரே மட்டும் கொல்கத்தா ஐகோர்ட்டின் பொறுப்பு தலைமை நீதிபதியாக பணியாற்றி வந்தார். ஆனால், தற்போது பணியில் இருக்கும் 4 பெண் நீதிபதிகளும் முழுநேர தலைமை நீதிபதியாக இருப்பதன் மூலம் முந்தைய அந்த சாதனை தற்போது முறியடிக்கப்பட்டுள்ளது. இதுவரை 21 பெண் நீதிபதிகள், தலைமை நீதிபதியாக இந்தியாவில் உள்ள பல்வேறு ஐகோர்ட்டுகளில் பணியாற்றி உள்ளனர். தமிழகத்தைச் சேர்ந்த பெண் நீதிபதி ஆர். பானுமதி, 2013–ம் ஆண்டு ஜார்கண்ட் ஐகோர்ட்டின் தலைமை நீதிபதியாக பணியாற்றிய நிலையில் அவர், பதவி உயர்வு மூலம் சுப்ரீம் கோர்ட்டு நீதிபதியாக பணியாற்றி ஓய்வு பெற்றது குறிப்பிடத்தக்கது.






## மேகேதாட்டுக்கு ‘நோ’ சொன்ன தமிழகம்!

# கர்நாடக அரசுக்கு கடும் கண்டனம்

# அரசின் தனித்தீர்மானம்!

### பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றம்!!



சென்னை, ஜூன். 19–

மேகேதாட்டு விவகாரத்தில் கர்நாடகா அரசை கண்டித்து தமிழக அரசு கொண்டுவந்த தனித் தீர்மானம் சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

தமிழக சட்டப்பேரவையின் இரண்டாம் நாள் கூட்டத்தொடர் இன்று காலை 9.30 மணிக்கு தொடங்கியது. முதலில் மறைந்த மூத்த தலைவர்கள், திரைப் பிரபலங்கள், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் உள்ளிட்டோருக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, தமிழக முதல்வர் விஜய் மேகேதாட்டு விவகாரத்தில் கர்நாடகா நடவடிக்கையை எதிர்த்து அரசின் தனித் தீர்மானத்தை முன்மொழிந்தார். தொடர்ந்து பேசிய முதல்வர் விஜய், “காவிரி நடுவர் மன்றம் 5–2–2007 அன்று அளித்த இறுதித் தீர்ப்பையும், உச்ச நீதிமன்றம் 16–2–2018 அன்று அளித்த தீர்ப்பையும் மதிக்காமலும், சம்பந்தப்பட்ட படுகை மாநிலங்களின் இசைவைப் பெறாமலும், மத்திய அரசின் எந்தவித அனுமதியைப் பெறாமலும், கர்நாடக அரசு தன்னிச்சையாக காவிரி நதியின் குறுக்கே மேகேதாட்டுவில் அணை கட்ட முயற்சி மேற்கொள்வதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அதனால், கர்நாடக அரசின் இச்செயலுக்கு தனது கடும் எதிர்ப்பை இப்பேரவை தெரிவித்துக் கொள்கிறது. கர்நாடக அரசின் மேகேதாட்டு அணைத் திட்டத்திற்கு தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் உள்பட எவ்வித அனுமதியும் அளிக்கக்கூடாது என மத்திய அரசை இப்பேரவை வலியுறுத்துகிறது.

காவிரி நடுவர் மன்றமும், உச்ச நீதிமன்றம், காவிரிப்படுகை ஒரு பற்றாக்குறை படுகை எனக் குறிப்பிட்டுள்ளது, படுகையின் மொத்த நீரினையும், படுகை மாநிலங்களுக்கு பகிர்ந்தளித்து விட்டால், காவிரிப் படுகையில் புதிய திட்டங்களை மேற்கொள்ளவோ, கூடுதலாக நீரை பயன்படுத்தவோ இயலாது.

காவிரிப் பிரச்சினை தமிழகம் மற்றும் கர்நாடக மாநிலங்களின் உணர்வுப் பூர்வமான பிரச்சினையாகும்.

ஆதலால், கர்நாடக அரசு மேகேதாட்டுவிலோ அல்லது காவிரிப் படுகையில் வேறு எந்த இடத்திலோ அணை அல்லது எவ்வித புதிய நீர்த்தேக்க திட்டத்தையோ, பிற படுகை மாநிலங்களின் இசைவு இன்றியும், மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமலும் மேற்கொள்ளக்கூடாது என கர்நாடக அரசுக்கு அறிவுறுத்துமாறு மத்திய அரசை இப்பேரவை வலியுறுத்துகிறது. கர்நாடக அரசின் விரிவான திட்ட அறிக்கையை பரிசீலிக்கவோ, அதன்மீது நடவடிக்கைமேற்கொள்ளவோ அல்லது அதற்கு அனுமதி வழங்கவோ கூடாது என்று மத்திய நீர்வள குழுமத்தையும் இப்பேரவை வலியுறுத்துகிறது. கர்நாடக அரசின் இந்த முயற்சியை முறியடித்து, தமிழக விவசாயிகள் நலனைப் பாதுகாத்திட தமிழ்நாடு அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் இப்பேரவை தனது ஆதரவை ஒருமனதாக தெரிவித்துக்கொள்கிறது” என்று முதல்வர் பேசினார்.

தொடர்ந்து முதல்வரின் தீர்மானத்தின் மீது அரசியல் கட்சித் தலைவர்கள் உரையாற்றினர். தீர்மானத்தின் மீது முதல் நபராக உரையாற்றிய காங்கிரஸ் அமைச்சர் ராஜேஷ்குமார், தீர்மானத்தை ஆதரித்தார்.

இது குறித்து பெங்களூருவில் கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: மேகேதாட்டு அணை திட்டம் குறித்து தமிழக முதல்வர் விஜய்யுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார் தெரிவித்தார்.




தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்கள் மறைவிற்கு இரங்கற் குறிப்புகளும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் தோழர் நல்லகண்ணு, சட்டமன்றப் பேரவை முன்னாள் செயலாளர் சி.கு. இராமசாமி, பிரபல திரைப்படத் தயாரிப்பாளர்கள் ஆர்.பி. சௌத்ரி மற்றும் கே. ராஜன், பிரபல திரைப்பட இயக்குநர் பாரதிராஜா ஆகியோரது மறைவிற்கு இரங்கல் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தலையங்கம் மதுரை மணி

வெள்ளிக்கிழமை 19.06.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆனி மாதம் 05-ம் தேதி

# வாழ்க்கையில் வெற்றி பெற பின்பற்ற வேண்டிய 10 விதிகள்!




வாழ்க்கை எனும் பயணத்தில் வெற்றி, தோல்வி, மகிழ்ச்சி, துக்கம் என பல்வேறு அனுபவங்களை நாம் சந்திப்போம். இந்தப் பயணத்தில் வெற்றி பெற பல வழிகள் இருந்தாலும், சில அடிப்படை விதிகளைப் பின்பற்றுவதன் மூலம் நாம் வெற்றியை நோக்கி எளிதாக முன்னேறலாம். இந்தக் கட்டுரையில் வாழ்க்கை விளையாட்டில் வெற்றி பெற உதவும் 10 விதிகளைப் பற்றி விரிவாகப் பார்க்கலாம்.

**1. தெளிவான இலக்கு:**

வாழ்க்கையில் வெற்றி பெற முதலில் நாம் நம் இலக்கை தெளிவாக நிர்ணயிக்க வேண்டும். நாம் எதை அடைய விரும்புகிறோம் என்பதைத் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். ஒரு தெளிவான இலக்கு நாம் நோக்கி செல்ல வேண்டிய பாதைக்கு வழிகாட்டும்.

**2. கடின உழைப்பு:**

வெற்றி என்பது இலவசமாகக் கிடைக்காது. அதற்கு நாம் கடினமாக உழைக்க வேண்டும். நம் இலக்கை அடைய தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும். தடைகள் வந்தாலும் விடாமல் முயற்சி செய்யும்போது வெற்றி நிச்சயம் நம்மைத் தேடி வரும்.

**3. தொடர் கற்றல்:**

வாழ்க்கை என்பது ஒரு தொடர்ச்சியாக கற்கும் செயல்முறை. நாம் ஒவ்வொரு நாளும் புதிய விஷயங்களை கற்றுக்கொள்ள வேண்டும். புதிய திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். தொடர்ந்து கற்றுக் கொள்வதன் மூலம் நாம் நம்மை மேம்படுத்திக் கொள்ளலாம்.

**4. தன்னம்பிக்கை:**

தன்னம்பிக்கை என்பது வெற்றிக்கான முக்கியமான காரணி. நம்மால் எதுவும் செய்ய முடியும் என்ற நம்பிக்கை இருந்தால் நாம் எந்த சவாலையும் எதிர்கொள்ள முடியும். தன்னம்பிக்கை நம்மை வெற்றியின் உச்சிக்கு கொண்டு செல்லும்.

**5. பொறுமை:**

வெற்றி என்பது ஒரு நாளில் கிடைக்காது. அதற்கு நாம் பொறுமையாக இருக்க வேண்டும். தடைகள் வரும்போது பொறுமையை இழக்காமல் இருப்பது முக்கியம். பொறுமையுடன் தொடர்ந்து முயற்சித்தால் வெற்றி நிச்சயம் நம்மைத் தேடி வரும்.

**6. நேர்மறை சிந்தனை:**

நேர்மறையாக சிந்திப்பது வெற்றிக்கான மற்றொரு முக்கிய காரணி. நேர்மறையாக சிந்திக்கும்போது நம் மனம் புத்துணர்ச்சியுடன் இருக்கும். நேர்மறையான எண்ணங்கள் நல்ல விஷயங்களை நம் பக்கமாக ஈர்க்கும்.

**7. நல்ல உறவுகள்:**

நல்ல உறவுகள் நம் வாழ்க்கையில் மிகவும் முக்கியமானவை. குடும்பம், நண்பர்கள் மற்றும் சக பணியாளர்களுடன் நல்ல உறவைப் அமைத்துக் கொள்வது மன அமைதியையும், மகிழ்ச்சியையும் தரும். நல்ல உறவுகள் நம்மை வெற்றி பெற ஊக்குவிக்கும்.

**8. உடல் நலம்:**

உடல் நலம் இல்லாமல் மன நலத்துடன் இருக்க முடியாது. ஆரோக்கியமான உணவு உண்பது, தொடர்ந்து உடற்பயிற்சி செய்வது, போதுமான தூக்கம் ஆகியவை உடல் நலத்திற்கு மிகவும் முக்கியம். ஆரோக்கியமான உடல் நலம் நம்மை எந்த ஒரு சவாலையும் எதிர்கொள்ளும் திறனை அளிக்கும்.

**9. நேர மேலாண்மை:**

நேரத்தை சரியாகப் பயன்படுத்துவது வெற்றிக்கான இன்னொரு முக்கிய காரணி. நேரத்தை வீணடிக்காமல், நம் வேலைகளை திட்டமிட்டு செய்வதன் மூலம் நாம் நிறைய வேலைகளைச் செய்ய முடியும்.

**10. தன்னலமற்ற பணி:**

தன்னலமற்ற பணி செய்வது நம் வாழ்க்கைக்கு அர்த்தத்தைத் தரும். மற்றவர்களுக்கு உதவுவது நமக்கு மன நிறைவைத் தரும். தன்னலமற்ற பணி செய்வதன் மூலம் நாம் சமுதாயத்திற்கு நன்மை செய்யலாம்.

மேற்கண்ட 10 விதிகளைப் பின்பற்றுவதன் மூலம் நாம் வெற்றியை நோக்கி எளிதாக பயணிக்கலாம். இந்த விதிகளை நம் வாழ்வில் செயல்படுத்தி, நம் இலக்கை அடைய முயற்சி செய்ய வேண்டும். நினைவில் கொள்ளுங்கள், வெற்றி என்பது ஒரு இலக்கு அல்ல, அது ஒரு பயணம். எதிலும் அவசரம் இல்லாமல், நிறுத்தி நிதானமாக வாழ்க்கையில் முன்னேறும் முயற்சிகளில் ஈடுபடுங்கள்.




தேனி மாவட்டம் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அதிகாரியாக லெ.பாண்டி பொறுப்பு ஏற்றுக்கொண்டார்.

# புதிய ஓய்வூதிய திட்டம் வரை 30% இடைக்கால நிவாரணம்!

சென்னை, ஜூன். 19–

'டேப்ஸ்' ஓய்வூதிய திட்ட இறுதி விதிமுறைகள் வெளியிடப்படும் வரை, கடந்த ஜனவரி 1–ம் தேதிக்குப் பிறகு ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் – ஆசிரியர்களுக்கு மட்டும் அடிப்படை சம்பளத்தில் 30 சதவீதம் அல்லது ரூ.10 ஆயிரம் – இதில் எது அதிகமோ அத்தொகை இடைக்கால நிவாரணமாக வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.




அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நீண்ட கால கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் கடந்த 2025–ம் ஆண்டு ஜனவரி 4–ம் தேதி அப்போதைய முதல்வர் மு.க.ஸ்டா லின் 'தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம்' (Tamil Nadu Assured Pension Scheme – TAPS) என்ற புதிய ஓய்வூதிய திட்டத்தை அறிவித்தார். அதன்படி, அரசு ஊழியர்கள் இறுதியாகப் பெற்ற அடிப்படை சம்பளத்தில் 50 சதவீத தொகையுடன் நடைமுறையில் உள்ள அகவிலைப்படி சேர்த்து ஓய்வூதி யமாக வழங்கப்படும். பணிக்கொடை அதிகபட்சம் ரூ.25 லட்சம் வழங்கப்படும்.

இது தொடர்பான அரசாணை கடந்த ஜனவரி 9–ம் தேதி வெளியிடப்பட்டது. டேப்ஸ் ஓய்வூதிய திட்டம் தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியி டப்பட்டு அதன்பிறகு இத்திட்டம் நிறைவேற்றப்படும் அரசு அறிவித்திருந்தது. இந்தச் சூழலில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு தவெக தலைவர் விஜய் தலைமையில் புதிய அரசு கடந்த மே 10–ம் தேதி பொறுப்பேற்றது. தவெக தனது தேர்தல் அறிக்கையில் அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்படும் என வாக்குறுதி அளித்திருந்தது. எனவே, தவெக ஆட்சிக்கு வந்துள்ள நிலையில், மீண்டும் பழைய ஓய்வூதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்ற நம்பிக்கையில் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் இருந்து வருகின்றனர்.

பழைய ஓய்வூதிய திட்டத்தில் அரசு ஊழியர்களிடமிருந்து ஓய்வூதியத்துக்காக எந்தவிதமான பிடித்தமும் செய்யப்படுவது இல்லை. ஆனால், டேப்ஸ் ஓய்வூதிய திட்டத்தில் ஓய்வூதிய பலன்கள் பழைய ஓய்வூதிய திட்டத்தின் அடிப்படையில் என்றாலும் ஓய்வூதியத்துக்காக ஊழியர்களிடமிருந்து அவர்களின் அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப்படியில் மாதம்தோறும் 10 சதவீதம் பிடித்தம் செய்யப்படும். அதற்கு இணையான தொகையை அரசு தனது பங்காகச் செலுத்தும்.

டேப்ஸ் ஓய்வூதிய திட்டத்தின் இறுதி விதிகள் மற்றும் கணக்கீட்டு நடைமுறைகள் முழுமையாக வடிவமைக்கப்பட்டு வரும் நிலையில், இடைப்பட்ட காலத்தில் ஓய்வு பெறும் ஊழியர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில் இடைக்கால நிவாரணத் தொகை வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நிதித் துறை செயர் எம்.ஏ.சித்திக் வெளியிட்டுள்ள அரசாணையின் விவரம்:

டேப்ஸ் ஓய்வூதிய திட்டத்தின் இறுதி விதிகள் அறிவிக்கப்பட்டு, ஒவ்வொரு ஊழியருக்கும் அவர்கள் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளத்தில் 50 சதவீதம் ஓய்வூதியமாக நிர்ணயிக்கும் பணிக்குச் சற்றுக் கூடுதல் கால அவகாசம் தேவைப்படும்.

எனவே, 1.1.2026–க்குப் பிறகு ஓய்வு பெற்ற ஊழியர்கள் எவ்விதப் பொருளாதார பிரச்சினை இன்றி வாழ ஏதுவாக, அவர்களுக்கு இடைக்கால வாழ்வாதார ஆதரவுத் தொகை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. டேப்ஸ் திட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் வரை இது ஓர் இடைக்கால ஏற்பாடாக இருக்கும்.

இத்திட்டத்தின்படி, பணியில் இருந்து ஓய்வு பெற்ற ஊழியர் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளத்தில் 30 சதவீதம்அல்லது ரூ.10,000 – இதில் எது அதிகமோ அத்தொகை இடைக்கால நிவாரணத் தொகையாக நிர்ணயிக்கப்படும். அதோடுசேர்த்துநடைமுறையில் இருக்கும் அகவிலைப்படியும் வழங்கப்படும்.

இந்த இடைக்கால நிவாரண திட்டம் 1.4.2003 அன்று அல்லது அதற்குப் பிறகு ரெகுலர் ஊதிய விகிதத்தில் (பணியமர்த்தப்பட்டு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் (CPS) கீழ் இருந்தவர்கள். 1.1.2026 அன்று பணியில் நீடித்து, அதற்குப் பிறகு வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றவர்கள், குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் தகுதிவாய்ந்த பணிக்காலத்தை நிறைவு செய்தவர்கள், பணியின்போது மரணமடைந்த அரசு ஊழியர்களின் தகுதியான குடும்ப உறுப்பினர்கள் ஆகியோருக்கு மட்டும் பொருந்தும். அதேநேரத்தில் 1.1.2026–க்கு முன்னர் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கும், பணியில் இருந்து விலகியவர்களுக்கும் பொருந்தாது.

ஓய்வூதியதாரர் மரணமடைந்தால் அவர் பெற்று வந்த இடைக்கால தொகையில் 60 சதவீதம் குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும். ஓய்வூதியதாரர் இறந்தால் அவரது வாழ்க்கை துணை, அவருக்கு பிறகு 25 வயதை எட்டாத மகன்கள் மற்றும் திருமணமாகாத மகள்கள், வாழ்நாள் முழுவதும் சுயமாயக உழைத்து வாழ இயலாத அளவுக்குப் பார்வை குறைபாடு, மனநல பாதிப்பு, அறிவுசார் குறைபாடு அல்லது நடமாடும் திறன் குறைபாடு போன்ற உடல், மன ரீதியான மாற்றுத்திறனாளி குழந்தைகள், (வயது வரம்பு கிடையாது).

25 வயதைக் கடந்தும் திருமணமாகாத, விதவையான அல்லது விவாகரத்து பெற்ற மகள்கள் (அரசின் வருமான வரம்பு மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வாழ்நாள் முழுவதும் தகுதியுடையவர்). திருமணமாகாத அரசு ஊழியர்களின் பெற்றோர், பெற்றோர் இல்லாவிட்டால், தங்களை முழுமையாகச் சார்ந்திருந்ததாக அறிவிக்கப்பட்ட உடன் பிறந்தவர்கள் ஆகியோருக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

# ஐ.பி.எல். 2027-ல் அதிரடி மாற்றம்.. பிசிசிஐ மெகா பிளான்..!

புதுடெல்லி, ஜூன். 19–

2027 ஐபிஎல் தொடரை மார்ச் 10 ஆம் தேதியே தொடங்கவும், போட்டிகளின் எண்ணிக்கையை 92 ஆக உயர்த்தவும் பிசிசிஐ திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது.




இந்தியாவில் கடந்த 2008 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட ஐபிஎல் டி20 தொடர், உலகளவில் மிக வெற்றிகரமான கிரிக்கெட் லீக் தொடராக உருவெடுத்துள்ளது. இதுவரை 19 சீசன்கள் ரசிகர்களை குஷிப்படுத்திய நிலையில், அடுத்த ஆண்டு 20 வது சீசன் என்னும் வரலாற்று சிறப்புமிக்க மைல்கல்லை எட்டவுள்ளது. இதற்கான ஆரம்பகட்ட பணிகளை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் தற்போதே தீவிரமாக தொடங்கி உள்ளது.

**ஆர்சிபியின் ஹாட்ரிக் கனவு**

கடந்த 2025 ஆம் ஆண்டு ஐபிஎல் தொடரில் சாம்பியன் கோப்பையை முத்தமிட்ட ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி, அதே உத்வேகத்துடன் இந்த ஆண்டும் கோப்பையை தக்க வைத்து 'பேக்–டு–பேக்' சாம்பியனாக சாதனை படைத்தது. இதனால், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள 20 வது சீசனில் ஆர்சிபி ஹாட்ரிக் அடிக்குமா அல்லது சென்னை, மும்பை, கொல்கத்தா போன்ற முன்னாள் சாம்பியன்கள் மீண்டும் கம்பேக் கொடுப்பார்களா என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே இப்போதே உச்சத்தைத் தொட்டுள்ளது.

**மார்ச் 10 தொடக்கம்? – பிசிசிஐ அதிரடி திட்டம்**

வழக்கமாக ஐபிஎல் போட்டிகள் மார்ச் மாத இறுதியில் தொடங்கி மே மாதம் இறுதி வரை நடத்தப்படும். இந்த ஆண்டு மார்ச் 28 முதல் மே 31 வரை போட்டிகள் நடைபெற்றன. இருப்பினும், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நிலவிய கடுமையான கோடை வெயில் காரணமாக, மைதானத்தில் விளையாடிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வீரர்கள் உடல்ரீதியாக பெரும் அவதிக்குள்ளாகினர். வீரர்களின் இந்த சிரமத்தை கருத்தில் கொண்டு, 2027 ஐபிஎல் தொடரைச் சற்று முன்கூட்டியே நடத்த பிசிசிஐ திட்டமிட்டுள்ளது.

**புதிய உத்தேச அட்டவணை**

தொடங்கும் நாள்: மார்ச் 10, 2027

முடிவடையும் நாள்: மே 15, 2027

இப்படி முன்கூட்டியே தொடங்குவதன் மூலம் மே மாதத்தின் மிக கடுமையான வெயிலை தவிர்க்க முடியும் என பிசிசிஐ கருதுகிறது.

**74லிருந்து 94 ஆக உயரும் போட்டிகள்**

அதேசமயம் அடுத்த சீசனில் போட்டிகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்த்தப்படவுள்ளது. தற்போதைய சீசன் வரை மொத்தம் 74 போட்டிகள் மட்டுமே நடத்தப்பட்டு வந்தன. ஆனால், 2027 சீசனில் போட்டிகளின் எண்ணிக்கையை 94 ஆக அதிகரிக்க பிசிசிஐ திட்டமிட்டுள்ளது. போட்டிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதால், அட்டவணையில் பல மாற்றங்கள் செய்யப்பட வேண்டியிருக்கும். குறிப்பாக, ஒரே நாளில் இரண்டு போட்டிகள் நடத்தப்படும் நாட்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம். அதே சமயம் போட்டிகளின் எண்ணிக்கை 94 ஆக உயர்த்தப்படும் பட்சத்தில், வீரர்களின் பணிச்சுமை அதிகரிக்கும் அபாயம் உள்ளது. அதே நேரத்தில் தொடர் முன்கூட்டியே தொடங்கப்படுவதால், உலக கோப்பை அல்லது பிற சர்வதேச ஐசிசி தொடர்களுக்கு தயாராக வீரர்களுக்கு போதிய கால அவகாசம் கிடைக்கும்.

மேலும், மெகா ஏலமா அல்லது மினி ஏலமா, வீரர்களின் வரத்து எப்படி இருக்கப்போகிறது என்பது போன்ற அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் அடுத்தடுத்த மாதங்களில் பிசிசிஐ தரப்பில் இருந்து வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# 'நீட்' மறு தேர்வு ஒத்திவைப்பு!




சென்னை, ஜூன். 19–

தேர்வு தொடர்பாக சில வதந்திகள் சமூக வலைதளங்களில் பரவி வருவதாக கூறப்படுகிறது. இதுதொடர்பாக தேசிய தேர்வு முகமை (என்.டி.ஏ.) தன்னுடைய எக்ஸ் தளப் பக்கத்தில் விளக்கம் அளித்திருக்கிறது. அதன் விவரம் வருமாறு:– தேர்வுக்கு தயாராகியுள்ள ஒவ்வொரு மாணவரும் தங்கள் சிறந்த பங்களிப்பை வழங்குவதில் மட்டும் கவனம் செலுத்துங்கள்.

நீட் தேர்வு திட்டமிட்டபடி திட்டவட்டமாக நடைபெறும். சமூக ஊடகங்களில் பரவும் வதந்திகளையோ அல்லது தேர்வு ஒத்திவைப்பு குறித்த தேவையற்ற செய்திகளையோ பார்த்து மாணவர்கள் ஏமாறவேண்டாம். தேசிய தேர்வு முகமையின் (என்.டி.ஏ.) அதிகாரப்பூர்வ அறிவிப்புகளை மட்டுமே முழுமையாக நம்புங்கள்.

தேர்வு செயல்முறையின் நம்பகத்தன்மையைக் காப்பதே எங்களின் முதன்மை நோக்கமாகும். இதற்காக அதிநவீன மற்றும் பல அடுக்கு பாதுகாப்பு வளையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே, தேர்வில் எந்தவிதமான முறைகேடுகளில் ஈடுபட முயன்றாலும் அவர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீட் மறுதேர்வுக்கான வினாத்தாள்கள் ஒவ்வொரு மாநிலங்களுக்கும் பலத்த பாதுகாப்புடன் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் ஒவ்வொரு நகரங்களுக்கும் வினாத்தாள் விமானங்கள் வாயிலாக கொண்டு வரப்பட்டு, அங்கிருந்து ஹெலிகாப்டர் வாயிலாக அனுப்பப்படுகின்றன.

அதன்படி, சென்னைக்கு வினாத்தாள் வந்துவிட்டதா? என்பது குறித்த விவரத்தை பரம ரகசியம் போல பாதுகாக்கின்றனர். இதுவரை நடந்த நீட் தேர்வுகளில் நாளை மறுதினம் நடக்கும் மறுதேர்வு மாணவர்களுக்கு நிச்சயம் வித்தியாசமான அனுபவமாகவே இருக்கும் என்று கூறப்படுகிறது.



# தொட்டதெல்லாம் துலங்க, தடைகள் உடைய இதை செய்யுங்க..!




சிவபெருமானின் மறு அவதாரமாக திகழக்கூடியவர் கால பைரவர் என்றும் கால பைரவரை வழிபாடு செய்பவர்களுக்கு துர்மரணங்கள் ஏற்படாது என்றும், எதிரிகளின் தொல்லை நீங்கும் போன்ற பலவிதமான நன்மைகள் உண்டாகும். மேலும் நவகிரகங்களில் இருக்கக்கூடிய சனீஸ்வர பகவானின் குருவாக இவர் திகழ்வதால் நவக்கிரக தோஷத்தை நீக்கி நமக்கு நல்வழியை காட்டுவார். தேய்பிறை அஷ்டமியில் கடன் பிரச்சினை தீருவதற்காக காலபைரவரை வழிபாடு செய்வதன் மூலம் அற்புதமான பலனை பெற முடியும் என்று ஆன்மீக ரீதியாக கூறப்படுகிறது.

**அஷ்டமி திதியும் வழிபாட்டுப் பலன்களும்**

காலபைரவரை வழிபாடு செய்வதற்கு மிகவும் உகந்த திதியாக அஷ்டமி திதி திகழ்கிறது. நம்முடைய தேவைகளுக்கு ஏற்ப அஷ்டமி வழிபாட்டை இரண்டு வகையாகப் பிரித்து மேற்கொள்ளலாம்:

**தேய்பிறை அஷ்டமி:** நம்முடைய வாழ்க்கையில் இருக்கும் கஷ்டங்கள் அனைத்தும் தீர்வதற்கும், தீராத கடன் பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கும் தேய்பிறை அஷ்டமி வழிபாடு அற்புதமான பலனைத் தரும்.

**வளர்பிறை அஷ்டமி:** நம்முடைய வாழ்க்கையில் செல்வ வளம் அதிகரிப்பதற்கும், புதிய காரியங்கள் தடையின்றித் தொடங்குவதற்கும் வளர்பிறை அஷ்டமி நாளில் வழிபாடு செய்ய வேண்டும்.

எந்த ஒரு செயலைச் செய்யும் பொழுதும் தொடர்ந்து முட்டுக்கட்டைகளும், தடைகளும் வந்து கொண்டே இருக்கிறது என்று கவலைப்படுபவர்கள் வளர்பிறை அஷ்டமியிலோ, தேய்பிறை அஷ்டமியிலோ அல்லது பைரவருக்கு உகந்த சுப தினமான ஞாயிற்றுக்கிழமை ராகு காலத்திலோ கீழே குறிப்பிட்டுள்ள சூட்சும வழிபாட்டைச் செய்யலாம்.

**தடைகளைத் தகர்க்கும் வெட்டிவேர் மாலை சூட்சும வழிபாடு**

நம்முடைய வாழ்வில் வெற்றிகளை வாரி வழங்கக் கூடிய ஒரு அற்புதமான வேராகத் தான் இந்த வெட்டிவேர் திகழ்கிறது. இந்த வழிபாட்டைச் செய்வதற்குத் தேவையான பொருட்கள் மற்றும் செய்யும் முறை பின்வருமாறு:

**தேவையான பொருட்கள்:**

ஒரு வெட்டிவேர் மாலை
பன்னீர் (ரோஸ் வாட்டர்)
ஜவ்வாது மற்றும் புனுகு
8 நல்லெண்ணெய் தீபங்கள் (அகல் விளக்குகள்)

**வழிபாட்டு முறை:**

1. முதலில் வெட்டிவேரை அழகிய மாலையாகத் தொடுத்து, அருகில் இருக்கக்கூடிய காலபைரவரின் ஆலயத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

2.ஆலயத்தை அடைந்ததும், அந்த வெட்டிவேர் மாலையைத் தூய்மையான பன்னீரில் முழுவதுமாக நனைய வைக்க வேண்டும்.

3.பின்னர், பன்னீரில் நனைத்த அந்த வெட்டிவேர் மாலையை விபூதி நாதரான காலபைரவருக்குச் சாற்ற வேண்டும்.

4.காலபைரவர் எப்போதும் வாசனைப் பிரியர் என்று கூறப்படுவதால், வெட்டிவேர் மாலையுடன் சேர்த்து ஜவ்வாது, புனுகு போன்ற நறுமணப் பொருட்களையும் அர்ச்சனைக்கு வாங்கிக் கொடுக்க வேண்டும். இதனால் பைரவர் மனம் மகிழ்ந்து நம் செயல்களில் இருக்கும் தடைகளை நீக்குவார் என்பது நம்பிக்கை.

5.இதனைத் தொடர்ந்து, பைரவர் சந்நிதியில் 8 நல்லெண்ணெய் தீபங்களை வரிசையாக ஏற்றி வைத்து, நம்முடைய குறைகளையும் தடைகளையும் நீக்கக் கோரி மனமுருகி வேண்டிக் கொள்ள வேண்டும்.

**வேண்டுதல் நிறைவேறிய பின் செய்ய வேண்டியவை**

இந்தத் தனித்துவமான ஆன்மீக முறையில் நீங்கள் காலபைரவரை வழிபடத் தொடங்கும்போது, ஒவ்வொரு காரியத்திலும் வரும் தடைகள் நீங்கி காரிய வெற்றியும், மனநிம்மதியும் உங்களுக்குக் கிடைக்கும்.

இவ்வாறு நீங்கள் வேண்டிக்கொண்ட காரியம் எந்தவிதத் தடங்கலுமின்றி வெற்றிகரமாக நடைபெற்று முடிந்த பிறகு, மீண்டும் காலபைரவர் ஆலயத்திற்குச் செல்ல வேண்டும். அங்கு பைரவருக்குச் செய்யப்படும் அபிஷேகத்திற்காக அனைத்து விதமான அபிஷேகப் பொருட்களையும் வாங்கிக் கொடுப்பதோடு, அவருக்கு உகந்த வஸ்திரமும் (ஆடை) சமர்ப்பித்து, உங்களுடைய நன்றியறிதலைத் தெரிவிக்க வேண்டும்.

**அறிவிப்பு**

எமது கட்சிக்காரர் தேனி மாவட்டம், பெரியகுளம் டவுன், வடகரை, வடக்கு பூந்தோட்டத் தெரு, கதவு எண்.14/1A முகவரியில் வசிக்கும் முத்துராஜ் அவர்களின் குமாரர் S.M.மகாதேவன் என்பவரின் பெரியகுளம் 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம் 1 புத்தகம் ஆவண எண்.903/2002ம் நம்பர் ரிஜிஸ்டர் கிரைய அசல் ஆவணத்தை தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், பெரியகுளம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து Woodlands Hotel வரை உள்ள ரோட்டில் இரு சக்கர வாகனத்தில் செல்லும் போது 24.05.2026ம் தேதியில் தவறவிட்டுவிட்டார். கிடைக்கப் பெற்றவர்கள் உடனே கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

முகவரி:
P. சதிஸ்குமார், B.A.B.L.
(வழக்கறிஞர்)
4, நகராட்சி வணிக வளாகம், தென்கரை, பெரியகுளம்,
மொபைல் எண் : 98431 75966.




## உடல் பருமன் உள்ள பெண்கள் மற்றும் ஆண்களுக்கான ஆரோக்கிய குறிப்புகள்!




காலை உணவை தவிர்க்காதீர்கள் சத்தான காலை உணவு உடல் எடையை கட்டுப்படுத்த உதவும்.

தினமும் 30–45 நிமிடங்கள் நடைப்பயிற்சி செய்யுங்கள் கொழுப்பை குறைத்து இதய ஆரோக்கியத்தை மேம்படுத்தும்.

அதிக சர்க்கரை மற்றும் எண்ணெய் உணவுகளை தவிர்க்கவும் இனிப்புகள், குளிர்பானங்கள், ஜங்க் உணவுகளை குறைக்கவும்.

காய்கறி மற்றும் பழங்களை அதிகமாக சாப்பிடுங்கள் நார்ச்சத்து அதிகம் இருப்பதால் பசி கட்டுப்படும்.

போதுமான தண்ணீர் குடியுங்கள் தினமும் 23 லிட்டர் தண்ணீர் பருகுவது அவசியம்.

இரவு உணவை எளிமையாக வைத்துக்கொள்ளுங்கள் தூங்குவதற்கு 23 மணி நேரத்திற்கு முன் உணவு முடிக்கவும்.

போதுமான தூக்கம் பெறுங்கள் தினமும் 78 மணி நேரம் தூங்குவது எடை குறைப்புக்கு உதவும்.

மன அழுத்தத்தை குறையுங்கள் யோகா, தியானம் போன்றவை மனநலத்தையும் உடல் நலத்தையும் மேம்படுத்தும்.

புகை, மது பழக்கங்களை தவிர்க்கவும் உடல் எடை மற்றும் பல நோய்களின் அபாயத்தை அதிகரிக்கும்.

மருத்துவர் அல்லது உணவியல் நிபுணரின் ஆலோசனையுடன் உணவுத் திட்டம் பின்பற்றுங்கள் பாதுகாப்பான முறையில் எடை குறைக்க உதவும்.

“விரைவான எடை குறைப்பு அல்ல, ஆரோக்கியமான வாழ்க்கை முறையே நிரந்தர தீர்வு!”

# தமிழக ஆளுநர் அர்லேகர் ஊட்டி வருகை!

சென்னை, ஜூன். 19–

தமிழ்நாடு கவர்னர் அர்லேகர் 2 நாள் சுற்றுப்பயணமாக ஊட்டி வருகிறார்.

இதற்காக அவர் சென்னை மக்கள் மாளிகையில் இருந்து புறப்பட்டு விமானம் மூலமாக கோவைக்கு வருகிறார்.

பின்னர் கவர்னர் அர்லேகர், சாலை மார்க்கமாக காரில் ஊட்டிக்கு செல்கிறார். ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா அருகே உள்ள மக்கள் மாளிகைக்கு செல்லும் அவர் இன்றிரவு அங்கு தங்கி ஓய்வெடுக்கிறார்.

ஜூன். 20 காலை ஊட்டி மக்கள் மாளிகையில் இருந்து கார் மூலமாக புறப்பட்டு கோவைக்கு வருகிறார். கோவை வரும் வழியில் மேட்டுப்பாளையம் வனக் கல்லூரியில் நடைபெறும் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்க இருப்பதாக கூறப்படுகிறது.

அதன்பின்னர் கவர்னர் அர்லேகர் கார் மூலமாக கோவை வேளாண் பல்கலைக்கழகத்துக்கு வருகிறார். நாளை இரவு அங்குதங்கிஓய்வெடுக்கிறார்.



அதனை தொடர்ந்து நாளை மறுநாள் கோவை வேளாண் பல்கலைக்கழக வளாகத்தில் உலக யோகா தின நிகழ்ச்சி நடக்கிறது. இந்த நிகழ்ச்சியில் கவர்னர் அர்லேகர் பங்கேற்க உள்ளார்.

இந்த நிகழ்ச்சியை முடித்து கொண்டு கவர்னர் அர்லேகர் கார் மூலமாக கோவை விமான நிலையம் செல்கிறார். பின்னர் அங்கிருந்து விமானம் மூலமாக சென்னை புறப்பட்டு செல்கிறார். கவர்னரின் வருகையையொட்டி கோவை, நீலகிரியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. மாவட்டங்களில் உள்ள முக்கிய பகுதிகளில் போலீசார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# ராகுலுக்கு பிரதமர் மோடி, தமிழக முதல்வர் விஜய் பிறந்தநாள் வாழ்த்து!

சென்னை, ஜூன். 19–

லோக்சபா எதிர்க்கட்சி தலைவரும், காங்கிரஸ் எம்பியுமான ராகுலுக்கு பிரதமர் மோடி, தமிழக முதல்வர் விஜய் உள்ளிட்டோர் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர்.

பிரதமர் மோடி சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், ‘‘லோக்சபா எதிர்க்கட்சித் தலைவர் ராகுலுக்கு பிறந்தநாள் நல்வாழ்த்துகள். அவர் நல்ல உடல்நலத்துடனும் நீண்ட ஆயுளுடனும் வாழ பிரார்த்தனை செய்கிறேன்’’



என குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் விஜய் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: எனது அன்புச் சகோதரர், லோக்சபா எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்களுக்கு இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துகள்.

இந்தியத் திருநாட்டின் முன்னேற்றத்திற்காகவும், மக்களாட்சி மாண்புகளைக் காத்திடவும், அனைத்துத் தரப்பு மக்களின் நலன்களுக்காகவும் தொடர்ந்து ராகுல் குரல் கொடுத்து வருகிறார்.

அவர் நல்ல உடல்நலத்துடனும், நீண்ட ஆயுளுடனும், தங்களின் அனைத்து முயற்சிகளும் வெற்றியடையவும், பொதுவாழ்வில் சிறப்புடன் பணியாற்றிடவும் வாழ்த்துகிறேன். இவ்வாறு முதல்வர் விஜய் கூறியுள்ளார்.

# ஒப்பந்ததாரர்களுக்கான பாக்கி ரூ.1,800 கோடி முடக்கம்!

சென்னை, ஜூன். 19–

சென்னை மாநகராட்சி நிர்வாகம் பாக்கி வைத்துள்ள, 1,800 கோடி ரூபாயை விடுவிக்கும்படி ஒப்பந்த தாரர்கள் கோரி வரும் நிலையில், கடந்த தி.மு.க., ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட பணிகளை மறு ஆய்வு செய்ய, தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அவசர கதியில், ‘டெண்டர்’ விடப்பட்டுள்ள புதிய பணிகளை நிறுத்தி வைக்கவும், ஆய்வு முடியும் வரை புதிய பணிகளுக்கு டெண்டர் கோரவும் அரசு தடை விதித்துள்ளது.




# மூத்த குடிமக்களுக்கான கட்டணமில்லா பேருந்து பயண டோக்கன் 21-ந்தேதி முதல் வழங்கப்படும்!

சென்னை, ஜூன். 19–

மூத்த குடிமக்களுக்கான கட்டணமில்லா பேருந்து பயண டோக்கன்கள் விநியோகம், அடையாள அட்டை புதுப்பித்தல் பணிகள் வரும் ஜூன் 21, 2026 முதல் ஜூலை 31, 2026 வரை சென்னை முழுவதும் உள்ள 39 குறிப்பிட்ட மையங்களில் நடைபெற உள்ளன.



**மூத்த குடிமக்களுக்கான கட்டணமில்லா பேருந்து பயண டோக்கன்:**

தமிழக அரசின் சார்பில் மூத்த குடிமக்கள் பேருந்துகளில் கட்டணமில்லாமல் பயணம் செய்யும் வகையில், ஒவ்வொரு 6 மாதங்களுக்கும் ஒருமுறை இலவச பேருந்து பயண டோக்கன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில், நடப்பு ஆண்டின் ஜூலை 2026 முதல் டிசம்பர் 2026 வரையிலான அடுத்த 6 மாத காலத்திற்கு, சென்னை மாநகரைச் சேர்ந்த முதியவர்கள் பயன்படுத்துவதற்காக, ஒரு மாதத்திற்கு 10 டோக்கன்கள் வீதம் கட்டணமில்லா பேருந்து பயண டோக்கன்கள் மற்றும் புதிய அடையாள அட்டைகள் வழங்கும் பணிக்கான தேதியை மாநகர் போக்குவரத்துக் கழகம் அறிவித்துள்ளது.

**ஜூன் 21 முதல் ஜூலை 31 வரை; 39 மையங்கள்:**

இந்த கட்டணமில்லா பயண டோக்கன்கள் விநியோகம் மற்றும் அடையாள அட்டை புதுப்பித்தல் பணிகள், வரும் ஜூன் 21, 2026 முதல் ஜூலை 31, 2026 வரை சென்னை முழுவதும் உள்ள 39 குறிப்பிட்ட மையங்களில் நடைபெற உள்ளன. இந்த மையங்களில் எவ்வித விடுமுறையுமின்றி அனைத்து நாட்களிலும் காலை 8.00 மணி முதல் இரவு 7.30 மணி வரை டோக்கன்களைப் பெற்றுக் கொள்ளலாம். மேலும், இக்காலகட்டத்தில் வாங்கத் தவறுபவர்கள், ஆகஸ்ட் 1, 2026 முதல் டிசம்பர் 20, 2026 வரை வழக்கம்போல அந்தந்த பணிமனை அலுவலகங்களில், அலுவலக வேலை நாட்களில் மற்றும் வேலை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**1 அடையாள அட்டை; 2 புகைப்படம்:**

சென்னையைச் சேர்ந்த மூத்த குடிமக்கள் இத்தகைய புதிய அடையாள அட்டை மற்றும் கட்டணமில்லா பயண டோக்கன்களைப் பெறுவதற்குத் தங்களின் இருப்பிடச் சான்றாகக் குடும்ப அட்டை, வயதுச் சான்றாக ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை அல்லது கல்விச் சான்றிதழ் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று மற்றும் 2 பாஸ்போர்ட் அளவு வண்ணப் புகைப்படங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். இந்த டோக்கன்களை அடையாறு, திருவான்மியூர், மந்தவெளி, சைதாப்பேட்டை, தி.நகர் உள்ளிட்ட 25 பணிமனைகள் மற்றும் பேருந்து நிலையங்கள் உள்ளிட்ட மையங்களில் முதியவர்கள் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

# டெலிகிராம் மீதான தற்காலிக தடை சரி தான்: டில்லி ஐகோர்ட் திட்டவட்டம்!

புதுடெல்லி, ஜூன். 19–

நீட் தேர்வு முடியும் வரை, டெலிகிராம் செயலிக்கு தற்காலிக தடை விதித்த மத்திய அரசின் முடிவு சரி தான் என்று டில்லி உயர்நீதி மன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான, ‘நீட்’ நுழைவுத் தேர்வு கடந்த மாதம், 3ம் தேதி நடந்தது. வினாத்தாள் கசிந்ததாக எழுந்த புகாரை தொடர்ந்து, வரும் 21ல் மறுதேர்வு நடக்கிறது. இந்நிலையில், ‘டெலிகிராம்’ தகவல் பரிமாற்ற செயலியில், ‘நீட்’ மறுதேர்வு வினாத்தாள் விற்பனை செய்யப்படுவதாக வதந்தி பரவியது.

இதையடுத்து, வரும் 22 வரை, ‘டெலிகிராம்’ செயலியை முடக்க மத்திய அரசு உத்தரவிட்டது. இதை எதிர்த்து, ‘டெலிகிராம்’ நிறுவனம் டில்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. இதை விசாரித்த உயர் நீதிமன்றம், இந்த விவகாரத்தில் மத்திய அரசு பதில் அளிக்க உத்தரவிட்டு இருந்தது.

இதைத்தொடர்ந்து, ‘நாட்டின் பாதுகாப்புக்கு ‘டெலிகிராம்’ தகவல் பரிமாற்ற செயலி அச்சுறுத்தலாக இருக்கிறது. பயங்கரவாதம், இணைய குற்றங்கள், நிதி மோசடி, போதை பொருள் கடத்தல் உள்ளிட்ட சட்டவிரோத செயல்களுக்கு அந்த செயலி துணை போகிறது’ என, டில்லி உயர் நீதிமன்றத்தில் மத்திய அரசு அறிக்கை தாக்கல் செய்தது. இதையடுத்து, தேதி குறிப்பிடாமல் தீர்ப்பை நீதிமன்றம் ஒத்திவைத்து இருந்தது.




இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது அப்போது நீட் தேர்வு முடியும் வரை, டெலிகிராம் செயலிக்கு தற்காலிக தடை விதித்த மத்திய அரசின் முடிவு சரி தான் என்று டில்லி உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்து உத்தரவிட்டது.

# அமேசானையே முந்திய ஸ்பேஸ் எக்ஸ்: உலகின் 5-வது பெரிய நிறுவனமாக சாதனை!

சமீபத்தில் பங்குச்சந்தையில் நுழைந்து ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் மின்னல் வேக வளர்ச்சியைக் கண்டுள்ளது. எலான் மஸ்க்கிற்கு சொந்தமான இந்த ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம், அமேசான் நிறுவனத்தை பின்னுக்குத் தள்ளி, உலகின் 5–வது மதிப்புமிக்க நிறுவனமாக உருவெடுத்துள்ளது. மேலும், ஏஐ தொழில்நுட்பத்தில் கவனம் செலுத்தும் நோக்கில், கர்சர் என்ற ஸ்டார்ட்–அப் நிறுவனத்தை ரூ. 60 பில்லியன் டாலருக்கு வாங்குவதாகவும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது. முன்னதாக, உலகின் முதல் டிரில்லியனர் என்ற சாதனையையும் எலான் மஸ்க் படைத்தார். ஸ்பேஸ் எக்ஸ், டெஸ்லா, எக்ஸ் சமூக வலைதளம் உள்ளிட்ட நிறுவனங்களின் தலைவரான எலான் மஸ்க்கின் விண்வெளி ஆய்வு நிறுவனமான ஸ்பேஸ் எக்ஸ், அமெரிக்காவின் நாஸ்டாக் பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டது. அந்த நிறுவனம் 7,500 கோடி டாலர் மதிப்பிலான பொதுப் பங்கு வெளியீட்டை அறிவித்தது. ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ஒரு பங்கின் ஆரம்ப விலை 135 அமெரிக்க டாலராக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

வர்த்தகத் தொடக்கத்திலேயே இப்பங்கின் மதிப்பு 21 சதவீதத்திற்கும் மேல் அதிகரித்தது. இதைத் தொடர்ந்து, நிறுவனத்தின் சந்தை மூலதனம் 2.15 டிரில்லியன் டாலராக உயர்ந்தது. ஸ்பேஸ் எக்ஸ் பங்கு விலை அதிகரிப்பால் எலான் மஸ்க்கின் சொத்து மதிப்பும் வேகமாக உயர்ந்தது. அந்த நிறுவனத்தின் பெரும்பான்மைப் பங்குகளைக் கொண்டுள்ள எலான் மஸ்க், உலக வரலாற்றிலேயே 1 டிரில்லியன் டாலர் (கிட்டத்தட்ட ரூ.100 லட்சம் கோடி) சொத்து மதிப்பை எட்டிய முதல் டிரில்லியனர் என்ற சாதனையைப் படைத்தார்.

# தனியார் பள்ளிகள் அங்கீகார விவகாரம்: திமுக மாஜி மகேஷுக்கு நெருக்கடி?



சென்னை, ஜூன். 19–

அங்கீகாரம் வழங்க லஞ்சம் பெற்றதாக கூறப்படும் விவகாரத்தில், தனியார் பள்ளிகள் கூட்டமைப்பினர் அளித்த புகாரால், முன்னாள் பள்ளி கல்வித்துறை அமைச்சர் மகேஷுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம் மற்றும் தடையில்லா சான்றிதழ்களை, பள்ளி கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் சமீபத்தில் சென்னையில் வழங்கினார். இது குறித்து, தனியார் பள்ளி கூட்டமைப்பினர் அளித்த பேட்டி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அதாவது, ‘தமிழகத்தில் உள்ள 1,000க்கும் மேற்பட்ட தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம், தடையில்லா சான்றிதழ் வழங்க, முந்தைய ஆட்சியினருக்கு 25 லட்சம் ரூபாய் லஞ்சம் கொடுக்க வேண்டி இருந்தது. ‘ஆனால், த.வெ.க., ஆட்சியில் 1 ரூபாய் கூட செலவு இல்லாமல் அங்கீகாரம் பெற்றிருக்கிறோம்’ என, அந்த கூட்டமைப்பின் நிர்வாகிகள் கூறினர். இதன் வாயிலாக, கடந்த தி.மு.க., ஆட்சியில், தனியார் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குவதில் நடந்த முறைகேடுகள் அம்பலமாகி உள்ளன.

# முன்னாள் மாணவர்கள் சந்திப்பு!



ஒட்டன்சத்திரம் ஜூன். 19–

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் கஸ்தூரி ரெட்டியார் அரசு மேல்நிலைப்பள்ளியில் 1980 ஆம் ஆண்டுகளில் இப்பள்ளியில் பயின்ற முன்னாள் மாணவர்களில் 60 பேர் ஒன்றாக இணைந்து கே.ஆர்.ஜி பாய்ஸ் ஆஃப் எய்ட்டீஸ் என்ற பெயரில் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து செயல்படுகின்றனர்.

இந்த முன்னாள் மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிக்கு தங்களால் இயன்ற ஏதாவது உதவி செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் தங்களுக்குள் நிதி சேகரித்து தாங்கள் படித்த கே.ஆர்.ஜி பள்ளியில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல் மற்றும் 2 ஆம் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகையை கடந்த ஆண்டிலிருந்து வழங்கி வருகின்றனர்.

இரண்டாவது ஆண்டாக 2026 மாணவ செல்வங்களுக்கு நினைவு பரிசும் கல்வி ஊக்கத்தொகையும் கே.ஆர்.ஜி பாய்ஸ் ஆஃப் எய்ட்டீஸ் குழுவினரால் வழங்கப்பட்டது. எதிர்கால இந்தியாவின் தூண்களான மாணவ, மாணவிகளை ஊக்கப்படுத்தும் இந்த சேவையை மேலும் சிறப்பாக தொடர்ந்து செயல்படுத்தவும் உறுதி மேற்கொண்டுள்ளனர்.

# வேலை வாய்ப்பு

## தேர்வே இல்லாமல் மாசம் ரூ.1.5 லட்சம் சம்பளத்தில் ரிசர்வ் வங்கியில் வேலை!!




நாட்டின் நிதி தலையெழுத்தையே மாற்ற கூடிய ஒரு அமைப்பு தான் ரிசர்வ் வங்கி. இங்கே இளம் நிபுணர்களுக்கான (Young Professionals) புதிய வேலைவாய்ப்பு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இந்த வேலையில் சேர்பவர்களுக்கு மாசம் 1.5 லட்சம் ரூபாய் சம்பளம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாதாந்திர உதவித்தொகையுடன் கூடிய இளம் தொழில்நிபுணர் பணிகளுக்கு ரிசர்வ் வங்கி அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இதில் தேர்ச்சி பெற்று பணி வாய்ப்பு பெறுவோருக்கு மாதம் ரூ.1.5 லட்சம் Stipend வழங்கப்படும். இது முற்றிலும் ஒப்பந்த அடிப்படையிலான முழுநேரப் பணியாகும். ஆரம்பத்தில் 3 ஆண்டுகள் ஒப்பந்தம் இருக்கும். தேவைப்பட்டால் அதிகபட்சமாக 5 ஆண்டுகள் வரை நீட்டிக்கப்படலாம்.

தேர்வு செய்யப்படும் அனைவரும் மும்பையில் உள்ள ரிசர்வ் வங்கியின் தலைமை அலுவலகத்தில் பணியமர்த்தப்படுவார்கள்.

விண்ணப்பதாரர்கள் 21 முதல் 30 வயதிற்குள் இருக்க வேண்டும். முதுகலை (Postgraduate), இன்ஜினியரிங் (B.E/B.Tech) அல்லது பிஹெச்டி (PhD) முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. பின்வரும் துறைகளில் தான் வேலைக்கு ஆட்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள்:

1. Artificial Intelligence (AI) & Quantum Technology (செயற்கை நுண்ணறிவு மற்றும் குவாண்டம் தொழில்நுட்பம்)

2. Cyber Security & IT Risk (சைபர் பாதுகாப்பு) 3. Data Analysis / Analytics (தரவு பகுப்பாய்வு)

4. Climate Change Risk & Sustainable Finance (பருவநிலை மாற்ற அபாய மேலாண்மை)

5. Financial Markets & Payment Systems (நிதிச் சந்தை மற்றும் பணப் பரிவர்த்தனை அமைப்புகள்)

இந்த பணிக்கு விண்ணப்பம் செய்ய https://opportunities.rbi.org.in/scripts/bs_viewcontent.aspx?Id=5079 இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தை டவுன்லோட் செய்து, அதை முழுமையாக நிரப்பிக் கொள்ளவும். நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் சேர்த்து கீழே உள்ள ஆவணங்களை PDF வடிவில் ஸ்கேன் செய்து கொள்ள வேண்டும்:

உங்களுடைய தற்போதைய சுயவிவரக் குறிப்பு (Resume) கல்விச் சான்றிதழ்கள் (Degree/Educational Certificates) Statement of Interest (இந்த வேலைக்கு நீங்கள் ஏன் சேர விரும்புகிறீர்கள் என்ற விவரம்) Advertisement: 0:02 கல்வி அல்லது கொள்கை சார்ந்த உங்களின் எழுத்து ( Sample of academic or policy writing) உங்களை நன்கு தெரிந்த பேராசிரியர்கள் அல்லது முந்தைய மேலாளரிடம் பெற்ற பரிந்துரைக் கடிதம் (Recommendation Letter) தயார் செய்த அனைத்து ஆவணங்களையும் yphrmdco@rbi.org.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும். நீங்கள் அனுப்பிய விண்ணப்பங்கள் முதலில் பரிசீலனை செய்யப்பட்டு தகுதியானவர்கள் மட்டும் தேர்வு செய்யப்படுவார்கள். அதன் பிறகு சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்காணல் நடைபெறும். நேர்காணலுக்கான அழைப்பு கடிதம் மின்னஞ்சல் மூலமாக மட்டுமே அனுப்பப்படும். விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதி நாள் ஜூலை 6 ஆகும்.



இராமநாதபுரம் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக சாலிதளபதி பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



# ஈரானுக்கு டிரம்ப் மீண்டும் எச்சரிக்கை!

டெஹ்ரான், ஜூன். 19–

ஈரான் ஒப்பந்தத்தை மீறினால் கடுமையான குண்டுவீச்சு தாக்குதலை நடத்துவோம் என அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் கூறியுள்ளார்.

ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே நான்கு மாதங்களாக நடந்து வந்த கடுமையான போரை முடிவுக்குக் கொண்டு வர. அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் மற்றும் ஈரான் தலைவர்கள் தற்காலிக புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மின்னணு முறையில் கையெழுத்திட்டுள்ளனர். இந்த ஒப்பந்தம் நாளை (வெள்ளிக்கிழமை) சுவிட்சர்லாந்தில் உள்ள பர்கென்ஸ்டாக்கில் அதிகாரப்பூர்வமாக நேரில் கையெழுத்தாகிறது. இதன்மூலம் உலகளாவிய கச்சா எண்ணெய் மற்றும் சமையல் கியாஸ் வினியோகத்தில் ஐந்தில் ஒரு பங்கைத் தீர்மானிக்கும் முக்கியப் பாதையான ஹார்முஸ் நீரிணை, நாளை முதல் முழுமையாகத் திறக்கப்படும் என டிரம்ப் அறிவித்துள்ளார்.



இதனை தொடர்ந்து அவர் மேலும் கூறுகையில், ஈரானுடனான பேச்சுவார்த்தைகளுக்காக 60 நாள் காலக்கெடுவை ஒரு கைமையான காலக்கெடுவாக கருதவில்லை. அவர்கள் சரியாக நடந்துகொள்ளும் வரை அதை பற்றி நான் பெரிதாக கவலைப்பட மாட்டேன். ஆனால் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தால் ராணுவ நடவடிக்கை எடுக்கப்படலாம். அவர்கள் இணங்கி வராவிட்டால் நாங்கள் குண்டுவீசுவோம் என்பது ஒரு மிரட்டல் என அதை நீங்கள் எப்படி வேண்டுமானாலும் அழைக்கலாம்.

ஆனால் அது பெரும்பாலும் நடக்கவே செய்யும். ஈரான் ஒப்பந்தத்தை மீறினால் கடுமையான குண்டுவீச்சு தாக்குதலை நடத்துவோம். அவர்கள் அப்படி செய்வதை நான் விரும்பவில்லை. அவர்கள் ஒப்பந்தத்தை மதிக்க வேண்டும் என்று விரும்புகிறேன் என்றார்.

கடந்த மூன்று மாதங்களாக மூடிக்கிடந்த இந்த கடல்வழிப் பாதையில், போர் ஏற்படுவதற்கு முந்தைய நிலை விரைவில் திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒப்பந்தம் கையெழுத்தான உடனே ஈரான் மீதான எண்ணெய் வர்த்தகத் தடைகளை நீக்க அமெரிக்கா ஒப்புக் கொண்டுள்ளது. இதன் மூலம் ஈரான் தனது கச்சா எண்ணெய் மற்றும் எரிபொருட்களை எந்தவிதக் கட்டுப்பாடும் இன்றி விற்கலாம்.

# தொழிலாளர் வருங்கால வைப்புநிதி - 8.25 சதவீத வட்டிக்கு மத்திய அரசு ஒப்புதல்!

புதுடெல்லி, ஜூன். 19–

தொழிலாளர்கள் வருங்கால வைப்புநிதிக்கான 8.25 சதவீத வட்டிக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 7 கோடிக்கு மேற்பட்ட சந்தாதாரர்களின் கணக்கில் இம்மாதம் வட்டி வரவு வைக்கப்படும்.

3 தொழிலாளர்களின் சம்பளத்தில் இருந்து மாதந்தோறும் பிடித்தம் செய்யப்படும் குறிப்பிட்ட தொகை, அவர்களின் எதிர்கால தேவைக்காக தொழிலாளர்கள் வருங்கால வைப்புநிதியில் சேமிக்கப்படுகிறது. அதற்கு ஆண்டுதோறும் வட்டி வழங்கப்படுகிறது.

தொழிலாளர்கள் வருங்கால வைப்புநிதி அமைப்பின் உயரிய அமைப்பான மத்திய அறங்காவலர்கள் வாரியம், ஆண்டுதோறும் வட்டி விகிதத்தை முடிவு செய்கிறது.

கடந்த மார்ச் 2–ந் தேதி, மத்திய தொழிலாளர்துறை மந்திரி மன்சுக் மாண்டவியா தலைமையில் நடந்த மத்திய அறங்காவலர்கள் வாரிய கூட்டத்தில், கடந்த 2025–2026 நிதியாண்டுக்கு வட்டி விகிதத்தை 8.25 சதவீதமாக தொடர முடிவு செய்யப்பட்டது.

பின்னர், இந்த முடிவு, மத்திய நிதி அமைச்சகத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில், 2025–2026 நிதியாண்டுக்கு 8.25 சதவீத வட்டிவிகிதம் வழங்க மத்திய நிதி அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

இதையடுத்து, மத்திய தொழிலாளர் அமைச்சகத்தின் உத்தரவுப்படி, 7 கோடிக்கு மேற்பட்ட தொழிலாளர் வருங்கால வைப்புநிதி சந்தாதாரர்களின் கணக்குகளுக்கு 8.25 சதவீத வட்டி விகிதம் இம்மாதம் வரவு வைக்கப்படும் என்று மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்மூலம், தொழிலாளர் வருங்கால வைப்புநிதிக்கு 2023–2024 நிதியாண்டில் இருந்து தொடர்ந்து 3–வது ஆண்டாக 8.25 சதவீத வட்டி வழங்கப்படுகிறது.

# கொரோனா வைரஸ் பரவலுக்கு சீன நிறுவனம் தான் காரணம்!

புதுடெல்லி, ஜூன். 19–

கொரோனா வைரஸ் பரவலுக்கு சீனாவின் வூகான் நிறுவனத்தில் அமெரிக்க நிதியுதவியுடன் நடந்த ஆராய்ச்சியே காரணம் என பதவி விலகும் உளவுத்துறை இயக்குனர் துளசி கபார்ட் குற்றச்சாட்டியுள்ளார்.



கோவிட்–19 தொற்றுநோய் முதன்முதலில் 2019ம் ஆண்டு டிசம்பர் மாதம் சீனாவின் ஹுபெய் மாகாணத்தில் உள்ள வுஹான் நகரில் கண்டறியப்பட்டது. இந்தியாவின் முதல் கோவிட்–19 தொற்று பாதிப்பு கேரள மாநிலத்தில் 2020 ஜனவரி 30ம் தேதி பதிவானது. இதைத்தொடர்ந்து நாடு முழுவதும் பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

தற்போது கோவிட்–19 தொற்று பரவல் மற்றும் வெளிநாடுகளில் உள்ள அமெரிக்க நிதியுதவி பெறும் உயிரியல் ஆய்வகங்கள் குறித்து பல்வேறு குற்றச்சாட்டுகளை அமெரிக்காவின் உளவுத்துறை இயக்குனர் துளசி கபார்ட் முன்வைத்து உள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலுக்கு சீனாவின் வூகான் நிறுவனத்தில் அமெரிக்க நிதியுதவியுடன் நடந்த ஆராய்ச்சியே காரணம்.

வைரஸ் பரவல், அதை மூடி மறைக்க முயற்சி ஆகியவற்றுக்கு காரணமாக இருந்ததாக முன்னாள் அதிபர் ஜோ பைடனின் ஆலோசகர் ஆண்டனி பாஸி மீது துளசி கபார்ட் குற்றம் சாட்டியுள்ளார். அவர் இந்த ஆய்வகங்களில் அபாயகரமான நோய்க்கிருமிகள் கையாளப்பட்டதாகவும், அதற்கான தகவல்கள் அமெரிக்க மக்களிடம் இருந்து வேண்டுமென்றே மறைக்கப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

ஆராய்ச்சிகளை அம்பலப்படுத்த முயன்ற விஞ்ஞானிகள் அச்சுறுத்தப்பட்டதாக கூறி துளசி கபார்ட் பகீர் கிளப்பி உள்ளார். அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகத்தில் பொறுப்பேற்ற பிறகு, அந்த ஆய்வகங்களை விசாரிக்கத் தனது அலுவலகம் நடவடிக்கை எடுத்ததாக துளசி கபார்ட் தெரிவித்தார்.

யார் இந்த துளசி கபார்ட்!

* ஹவாயைச் சேர்ந்த முன்னாள் ஜனநாயகக் கட்சி பார்லிமென்ட் உறுப்பினரான துளசி கபார்ட், டிரம்ப் இரண்டாவது முறையாக அதிபராக பொறுப்பேற்ற பிறகு, கடந்த ஆண்டு பிப்ரவரியில் உளவுத்துறை இயக்குனராக நியமிக்கப்பட்டார்.
* அவர் தேசிய உளவுத்துறையின் எட்டாவது இயக்குநர் ஆவார்.
* 2013 முதல் 2021 வரை ஹவாய் மாகாணத்தின் சார்பாக அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் உறுப்பினராக இருந்தார். ஆரம்பத்தில் ஜனநாயகக் கட்சியில் இருந்த இவர், 2022–ல் சுயேச்சையானார். பின்னர் 2024–ல் குடியரசுக் கட்சியில் இணைந்தார்.
* அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் உறுப்பினரான முதல் இந்து என்ற பெருமையைப் பெற்றவர்.

# குதிரை பேரம் வழக்கை தள்ளுபடி செய்தது உச்சநீதிமன்றம்!



மதுரை, ஜூன். 19–

மதுரையை சேர்ந்த கே.கே.ரமேஷ் என்பவர் உச்சநீதிமன்றத்தில் ரிட் மனு ஒன்றை தாக்கல் செய்தார்.

அந்த மனுவில்,"நடந்து முடிந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில், விஜய் தலைமையிலான த.வெ.க. 108 இடங்களில் மட்டுமே வென்று ஆட்சி அமைத்தது.

எனினும், தி.மு.க. கூட்டணியில் இருந்த சில கட்சிகள் மற்றும் அ.தி.மு.க.வின் ஒரு பிரிவினரின் ஆதரவோடு, கடந்த 13–ந் தேதி நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் 144 வாக்குகளைப் பெற்று த.வெ.க. அரசு வெற்றி பெற்றது. இந்த வாக்கெடுப்பில் தி.மு.க. கூட்டணி கட்சிகள் வெளிநடப்பு செய்தன.

இந்த வாக்கெடுப்பில் வெற்றி பெற அரசியல் கட்சிகளிடையே ரூ.1,000 கோடி அளவுக்கு குதிரை பேரம் நடந்ததாகப் புகார்கள் எழுந்துள்ளன. எனவே, இது குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்றும், விசாரணை முடியும் வரை தமிழகத்தில் உடனடியாக ஜனாதிபதி ஆட்சியை அமல்படுத்த வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தரிட் மனு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதி மோகனா அடங்கிய அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, குதிரை பேர வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டது.

குதிரை பேரம் விவகாரத்தை பொதுநல வழக்காக எடுத்து விசாரிக்க முடியாது எனக்கூறி உச்சநீதிமன்றம் மனுவை தள்ளுபடி செய்துள்ளது.

# சென்னை பரந்தூரில் 2-வது விமான நிலையம்?

சென்னை, ஜூன். 19–

சென்னைக்கு இரண்டாவது விமான நிலையம் அமைக்கப்படும், ஆனால், அது பரந்தூரில் அமையாது என்று எரிசக்தி வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்துள்ளார். சட்டப்பேரவையில் ஆளுநரின் உரைக்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் நிர்மல்குமார், பரந்தூரில் அமையவுள்ள விமான நிலையத் திட்டத்தை எதிர்ப்பதில் அரசு உறுதியாக இருப்பதாகவும், மாற்று இடத்தைத் பரிசீலிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.



பரந்தூரில் இரண்டாவது விமான நிலையம் அமையக் கூடாது என்று போராடி வரும் கிராம மக்களுக்கு இது மிகப்பெரிய நிம்மதியை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

சென்னையின் இரண்டாவது விமான நிலையம் பரந்தூரில் அமையாது என்று அமைச்சர் ஆர். நிர்மல்குமார் தெளிவுபடுத்தியிருக்கிறார். அத்துடன், 2வது விமான நிலையம் அமைப்பதற்கான மாற்று இடம் குறித்து ஆராயப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விஜய் தலைமையிலான தவெக அரசு பதவியேற்றது முதலே, பரந்தூரில் விமான நிலையம் அமையுமா என்று கேள்விகள் எழுந்த நிலையில், அமைச்சர் ஒருவர் இது குறித்து அதிகாரப்பூர்வமாக பேசியிருப்பது இதுவே முதல் முறை.

தவெக தலைவர், முதல்வர் விஜய், தேர்தலுக்கு முன்பே, 2வது விமான நிலையத்துக்கு எதிராகப் போராடிய பரந்தூர் கிராம மக்களுக்காகக் குரல் கொடுத்திருந்தார். மேம்பாட்டுக்கு எதிரானவர்கள் அல்ல, ஆனால், பரந்தூரில் விமன நிலையம் அமைப்பதைத்தான் எதிர்க்கிறோம். விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும், நீர்நிலைகளையும் அழிப்பதை ஏற்க மாட்டோம். நாங்கள் ஆட்சிக்கு வந்தால், வேறொரு இடத்தில் விமான நிலையம் அமைப்பது தொடர்பாக பரிசீலிப்போம் என்று கூறியிருந்தார்.

அந்த வகையில், தற்போது தமிழக முதல்வராகியிருக்கும் ஜோசப் விஜய், பரந்தூரில் விமான நிலையம் அமைக்காமல், மாற்று இடத்தில அமைப்பது குறித்து பரிசீலனை நடத்தி வருவதாகத் தகவல்கள் வெளியாகின.

இந்த நிலையில்தான், அமைச்சர் நிர்மல்குமார், மேம்பாட்டுப் பணிகள் அனைத்தும் விவசாயிகள், நீர்நிலைகள், இயற்கை வளங்கள் பாதிக்காமல் மேற்கொள்ளப்படும் என்று உறுதியளித்திருக்கிறார்.

மேலும், அடுத்த வாரத்தில், மின் துறையின் நிதிநிலை குறித்து விரிவான தகவல்களைக் கொண்ட வெள்ளை அறிக்கை வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாதி அடிப்படையில் கோவில்களை பிரிக்கும் முடிவை எடுக்கக்கூடாது - மதுரை ஐகோர்ட்டு உத்தரவு!

மதுரை, ஜூன். 19–

தஞ்சாவூர் மாவட்டத்தை சேர்ந்த மகிழன் என்பவர், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது:–

தஞ்சாவூரில் நாடியம்மன் கோவில், முனீஸ்வரன் கோவில் உள்பட பல கோவில்களை பரம்பரை அறங்காவலர்கள் நிர்வகித்து வந்தனர். இதில் சாதி ரீதியான கோரிக்கைகள் எழுந்தன. இந்த நிலையில் இந்த கோவில் விவகாரத்தில் கடந்த அரசின் அமைச்சரின் பரிந்துரையின் பேரில் முனீஸ்வரன் கோவிலை மட்டும் தனியாக பிரித்து தனி நிர்வாகத்தின் கீழ் அறநிலையத்துறை கொண்டு வந்தது. இது சட்டவிரோதம். எனவே முனீஸ்வரன் கோவிலை தனிநிர்வாகத்தில் கொண்டு வந்ததை ரத்து செய்து உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி பரதசக்கரவர்த்தி முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் வக்கீல் ஆஜராகி, சமீபத்தில் இந்த கோவில் நிலங்களை சுற்றி சுற்றுச்சுவர் அமைத்து கோவில் சொத்துகளை பாதுகாக்க பரம்பரை அறங்காவலர்கள் நடவடிக்கை எடுத்தனர். அதன்பின்புதான் அதிருப்தி அடைந்த சிலர் எதிர்ப்புகளை தெரிவித்தனர். இது ஏற்புடையதல்ல என வாதாடினார்.



எதிர்தரப்பினர் சார்பில் ஆஜரான வக்கீல்கள், நாடியம்மன் கோவில் பரம்பரை அறங்காவலர்களின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது. முனீஸ்வரன் கோவிலை உள்ளூர் மக்களில் சில தரப்பினர் குலதெய்வமாக வழிபடுகின்றனர். பரம்பரை அறங்காவலரின் நிர்வாகத்தில் இருக்கும்போது வழக்கமான உரிமைகள் பாதிக்கப்பட்டன. இதனால் கோவிலை பிரிக்கும்படி கோரிக்கை வைத்ததன்பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவித்தனர். விசாரணை முடிவில் நீதிபதி பிறப்பித்த உத்தரவு வருமாறு:–

கோவில்களை இணைப்பது அல்லது பிரிப்பது குறித்த முடிவை, கோவில் நிர்வாகம் மற்றும் பக்தர்களின் நலன்களை கருத்தில் கொண்டு எடுக்க வேண்டும். இத்தகைய முடிவுகளை சாதி அடிப்படையிலான காரணங்களை சார்ந்து எடுக்கக்கூடாது. ஒரு அமைச்சரின் பரிந்துரை மட்டுமே நிர்வாக முடிவுக்கு அடிப்படையாக அமைய முடியாது. கோவில் பிரிப்பு உத்தரவில் அமைச்சரின் பரிந்துரை குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் கோவில் பிரிப்பு தொடர்பாக அறநிலையத்துறை ஆணையரின் உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. இந்த விவகாரத்தை அறநிலையத்துறை ஆணையர் மீண்டும் பரிசீலித்து, சம்பந்தப்பட்டவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பி விசாரிக்க வேண்டும். பின்னர் கோவில்கள் மற்றும் பக்தர்களின் நலனுக்கு எது சிறந்தது என்பது தொடர்பாக அறநிலையத்துறையின் கருத்துகளையும் பெற்று சட்டத்துக்கு உட்பட்டு 3 மாதத்தில் புதிய உத்தரவு பிறப்பிக்க வேண்டும். கோவிலை பிரித்த உத்தரவு ரத்து செய்யப்பட்டு புதிய பரிசீலனைக்காக அறநிலையத்துறை ஆணையருக்கு திரும்ப அனுப்பப்படுகிறது. இவ்வாறு நீதிபதி உத்தரவிட்டார்.

# சினிமா துளிகள்..!

## ஜூன் 19 : இன்று ஒரே நாளில் வெளியாகும் 7 படங்கள்!




ஜூன் 19ஆம் தேதியான இன்று ஒரே நாளில், நூறு சாமி, மா இண்டி பங்காரம் உள்ளிட்ட பல படங்கள் இன்று ஒரே நாளில் தியேட்டரில் ரிலீஸ் ஆகிறது. அவை என்னென்ன படங்கள் என்பதன் முழு லிஸ்டை இங்கு பார்ப்போம்.

**1/7 நூறு சாமி**

விஜய் ஆண்டனி, ஸ்வாசிகா உள்ளிட்டோர் நடிப்பில் உருவாகியிருக்கும் படம், நூறு சாமி. இந்த படத்தை சசி இயக்கியிருக்கிறார். இதில் அருள் தாஸ், காவ்யா அனில் உள்ளிட்டோர் முக்கிய கதாப்பாத்திரங்களில் நடித்துள்ளனர்.

**2/7 மா இண்டி பங்காரம்**

சமந்தா, நீண்ட நாட்களுக்கு பிறகு நடித்திருக்கும் திரைப்படம், மா இண்டி பங்காரம். இந்த படத்தை தமிழில், எங்கள் தங்கம் என்கிற பெயரில் வெளியிடுகின்றனர். இந்த படத்தை இந்த படத்தை, பி.வி.நந்தினி ரெட்டி இயக்கியிருக்கிறார். இது, வித்தியாசமான கதைக்களத்துடன் ஆக்ஷன் ட்ராமாவாக உருவாகியிருக்கிறது.

**3/7 பாலன்**

சைக்கலாஜிக்கல் த்ரில்லராக உருவாகியிருக்கிறது, 'பாலன் தி பாய்' திரைப்படம். இந்த படம், மஞ்சுமெல் பாய்ஸ் படத்தை இயக்கிய சிதம்பரத்தின் அடுத்த படமாகும்.

**4/7 மனு**

கிராமத்து கதையை பின்னணியாக கொண்டு, 'மனு' திரைப்படம் உருவாகியிருக்கிறது. இந்த படத்தில் காதலை வைத்தான் முக்கிய கதைக்களமும் நகர்கிறது. இதை துர்கா இயக்கியுள்ளார். ஸ்ரீயுத், ரேஷ்மா உள்ளிட்ட பலர் இதில் நடித்திருக்கின்றனர்.

**5/7 மக்கள் தலைவா**

மக்கள் தலைவா படத்தில் ரவி மரியா, ராதா ரவி உள்ளிட்ட பலர் நடித்திருக்கின்றனர். இந்த படம், அரசியல் பின்னணியை கொண்ட நகைச்சுவை படமாக வெளியாகியிருக்கிறது. ஒன்றும் தெரியாத ஒரு நபர் முதலமைச்சரானால் என்ன ஆகும் என்பதைத்தான் இந்த படம் காட்டுகிறது.

**6/7 பதினெண் கீழ்க்கணக்கு**

த்ரில்லர் கதையாக உருவாகியிருக்கும் படம்தான், பதினெண் கீழ்க்கணக்கு. இந்த திரைப்படத்தை விஷ்ணு ராஜன் இயக்கியிருக்கிறார். இது, ஒரு கொலையை சுற்றி நடக்கும் மர்ம முடிச்சுகளை அவிழ்க்கும் கதையாக இருக்கிறது.

**7/7 டார்க் ஜெயிண்ட்**

சைக்காலஜிக்கல் ட்ராமாவாக உருவாகியிருக்கும் படம், டார்க் ஜெயிண்ட். இந்த திரைப்படத்தில் பாக்கியராஜ், சோனியா அகர்வால், ஜோவிதா உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இதனை கே.எஸ்.கிஷான் இயக்கியிருக்கிறார்.

# அதிரடியாக குறைந்த தங்கம் விலை!



சென்னை, ஜூன். 20–

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.3,040 குறைந்து ரூ.1,08,560–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.380 குறைந்து ரூ.13,570–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கத்தை போல வெள்ளி விலையும் இன்று குறைந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.15 குறைந்து ஒரு கிராம் ரூ.255–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.




Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020